திரு. கரு. சீமைச்சாமி: இந்தக் கால்நடைப் பண்ணையில், ஆட்டுப் பண்ணையில் அரசாங்கத்திற்கு எந்த லாபமும் இல்லை என்பதும், நஷ்டம்தான் ஏற்படுகிறது என்பதும் தெரிந்திருந்தும், இதை ஏன் அரசாங்கம் நடத்த வேண்டும்? மேலும், மேலும் நஷ்டம் வரும் இப்பண்ணையை விட்டுவிட்டு அந்தந்த விவசாயி களிடத்திலேயே பொறுப்பை விட்டால் நலமாக இருக்கும் என்பதால் அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் பண்ணைகளைப் பார்த்துவிட்டு, விவசாயிகளிடம் விட்டால் கால்நடைகள் அபிவிருத்தி ஏற்படுமா என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் தாங்களே நடத்துவதோடுகூட, சம்சாரிகளிடமும் மாடுகளை, ஆடுகளைக் கொடுத்து அபிவிருத்தி செய்யப்பாடுபடுகிறது.

Cattle Farm in Madurai District

* 139 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to start a cattle-farm in the Madurai district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN: (*a*) & (*b*) The Government of India propose to establish a cattle Farm for the Tharparker breed of cattle in this State during the Forth Five-Year Plan and they have consulted this Government on the availability of lands and other facilities for this purpose. The suitability of the lands available in Madurai district is also being considered in this respect.

(அ), (இ) நான்காவது திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் தார்பார்க்கர் வகை மாடுகளுக்காக கால் நடைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் கருதியுள்ளது. இதற்காக வேண்டிய நிலங்கள், ஏனைய வசதிகள் முதலியவற்றைக் குறித்து இம் மாநில அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் கலந்தாலோசித் துள்ளது. மதுரை மாவட்டத்தில் கிடைக்கிற நிலங்கள் இதற்குப் பொருத்தமானவையா என்பதும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

போலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக லஞ்சக் குற்றச்சாட்டுகள்

*140 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) லஞ்சக் குற்றச் சாட்டுகளின்பேரில் 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய கைது செய்யப்பட்ட போலீஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை என்ன?

(இ) அவர்களில் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர்?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஒன்று.

(இ) ஒன்று.

(*a*) One.

(*b*) One.